## சுருக்கம்

சிலைகள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – அரியலூர் மாவட்டம் – உடையார்பாளையம் வட்டம் – தா.பழூர் ஊராட்சி ஒன்றியம் – தா.பழூர் கிராமம் – புல எண். 35 – 0.37.0 ஹெக்டேர் நிலத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ஜெயங்கொண்டம் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கணேசன் ஆகியோரது முழு திரு உருவ வெண்கலச் சிலைகளை நிறுவுதல் – அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.60 நாள்: 26.05.2010

படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் (சி3) துறை, நாள் 12.06.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் (சி.2) துறை, நாள் 23.11.1998.
3. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ( பொறுப்பு), அரியலூர் மாவட்டம் அவர்களின் ந.க.எண். 13802/2009/சி2, நாள் 11.03.2010.

* * * * *

ஆணை:-

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தா.பழூர் கிராமத்தில் புல எண். 35 – 0.37.0 ஹெக்டேர் நிலத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் ஜெயங்கொண்டம் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கணேசன் ஆகியோரது முழு திரு உருவ வெண்கலச் சிலைகளை நிறுவ தா.பழூர் தி.மு.க. ஒன்றிய செயலாளர் மற்றும் ஒன்றிய பெருந்தலைவர் திரு.க.சொ.க.கண்ணன் அவர்கள் அனுமதி கோரி மனு செய்திருந்தார். மேலும், மேற்காணும் சிலைகளை அவரது சொந்த செலவில் பராமரிப்புச் செய்து கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

2. மேற்படி தா.பழூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் 27.11.2009–இல் நடைபெற்ற ஊராட்சி மன்றக் கூட்டத்தில் ஜெயங்கொண்டம்– மதனத்தூர் சாலை கி.மீ. 43/4–இல் மேற்காணும் சிலைகளை நிறுவுவதற்கு அங்கீகாரம் அளித்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

3. அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர், மேற்காணும் சிலைகள் அமைக்கப்படுவதால் பொது மக்களுக்கோ, போக்குவரத்திற்கோ இடையூறு ஏதுமில்லை என்றும், சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், இதற்கு முன்பே புல எண்.3–ல் சாலை புறம்போக்கில் அண்ணல் அம்பேத்கார், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ஆகியோரது சிலைகள் உள்ளனவென்றும், அந்தச் சிலைகளுக்கும் தற்போது நிறுவப்படும் சிலைகளால் இடையூறு ஏதுமில்லை எனவும் தெரிவித்து மேற்காணும் சிலைகளுக்கு அனுமதி வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

..2..

4. அரியலூர் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), மேற்காணும் சிலைகள் நிறுவப்படவுள்ள சாலையானது விருத்தாசலம் – தொழுதூர் சாலை கி.மீ. 6/8 முதல் மதனத்தூர் (வழி) ஜெயங்கொண்டம் சாலை கி.மீ. 43/4 என்றும், இவ்விடத்தில் மேற்கண்ட திரு உருவச் சிலைகள் நிறுவப்படுவதால் வாகனப் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும், எதிர்காலத்தில் சாலை அகலப்படுத்தும் போது அவரது சொந்த செலவிலேயே சிலைகளை அகற்றிக் கொள்வதாக மனுதாரர் சம்மதம் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் மேற்காணும் சிலைகள் அமைக்க இத்துறைக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேற்படி இடத்தில் மேற்படி சிலைகள் அமைப்பது தொடர்பாக அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டம்–மதனத்தூர் சாலையில் தா.பழூர் சுத்தமல்லி பிரிவு ரோடு அருகே தார்சாலையின் கீழ்புறம் ஓரமாக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கணேசன் ஆகியோரது முழு திரு உருவ வெண்கலச் சிலைகளை நிறுவுவதற்கு சம்பந்தப்பட்ட இடமானது நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இடம் என்றும், மேற்படி இடத்தில் சிலைகள் அமைப்பதனால் போக்குவரத்து பாதிப்போ, பொது ஜன அமைதி மற்றும் சட்டம், ஒழுங்கு பாதிப்போ இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

6. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), அரியலூர் மாவட்டம் அவர்கள், மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் அரியலூர் கோட்டப் பொறியாளர் ஆகியோர்களின் அறிக்கையின் அடிப்படையில் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தா.பழூர் கிராமத்தில் புல எண்.35– 0.37.0 ஹெக்டேர் நிலத்தில் விருத்தாச்சலம்–தொழுதூர் சாலை கி.மீ. 6/8 முதல் மதனத்தூர் (வழி) ஜெயங்கொண்டம் சாலை கி.மீ. 43/4–இல் அடங்கிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் ஜெயங்கொண்டம் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கணேசன் ஆகியோரது முழு திரு உருவ வெண்கலச் சிலைகளை நிறுவுவதற்கு அரசு அனுமதி வழங்கலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்.

7. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நிறுவப்படும் சிலைகள் வெண்கலத்தால் ஆனதாக இருந்தால் மட்டுமே சிலை நிறுவ அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று 12.06.1995 நாளிட்ட அரசு கடித எண்.15611/சி3/94–6ல் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 23.11.1998 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண்.248–ல் சிலைகள் வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

8. மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசுக் கடிதம் மற்றும் அரசு ஆணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), அரியலூர் மாவட்டம் அவர்களின் பரிந்துரையினை ஏற்று, அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தா.பழூர் கிராமத்தில் புல எண். 35 – 0.37.0 ஹெக்டேர் நிலத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் ஜெயங்கொண்டம் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கணேசன் ஆகியோரது முழு திரு உருவ வெண்கலச் சிலைகளை நிறுவ கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

1. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் ஜெயங்கொண்டம் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கணேசன் ஆகியோரது முழு திரு உருவச் சிலைகளை வெண்கலத்தில் மட்டுமே செய்து உயர்ந்த பீடம் அமைத்து வைக்க வேண்டும்.

2. சிலைகளைச் சுற்றி நான்கு பக்கமும் இரும்புக் கம்பிவேலி அமைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும்.

3. கம்பித் தடுப்பு நல்லமுறையில் அழகுற அமைக்கப்பட வேண்டும். சிலைகள் உள்ளே அடைப்பட்டது போல அமைக்கப்படக் கூடாது.

4. சிலைகளை அமைக்க குழு ஒன்று அமைக்க வேண்டும். சிலைகளை இக்குழுவினரே பராமரிப்புச் செய்ய வேண்டும். பராமரிப்புச் செலவினை அவர்களே ஏற்று சரி செய்து கொள்ள வேண்டும்.

5. போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வண்ணம் சாலை மற்றும் பொது வழிகளிலிருந்து தகுந்த இடைவெளியுடன் சிலைகள் அமைய வேண்டும்.

6. பொதுமக்களின் அன்றாடப் பணிகளுக்கு இடையூறு நேராத வண்ணம் சிலைகளை அமைக்க வேண்டும்.

7. இச்சிலைகள் அமைக்கப்படவுள்ள பகுதியில் நெடுஞ்சாலைப் பகுதியினை எதிர்காலத்தில் வேறு ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யக்கூடாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி,
சென்னை–15.
மாவட்ட வருவாய் அலுவலர் /
மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு),
அரியலூர் மாவட்டம்.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
அரியலூர் மாவட்டம்.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.